# அவசரப் பரிந்துரைகளுக்கான நோயாளி குறித்த தகவல்கள்

## இந்த தகவல் தாள் ஏன் உங்கள் பல் மருத்துவர் அல்லது கண் மருத்துவர் உங்களை அவசரமாக மருத்துவமனைக்குச் செல்ல பரிந்துரைத்தார் என்பதையும் நீங்கள் செய்ய வேண்டியது குறித்தும் விளக்குகிறது

**நான் ஏன் அவசரமாக மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்பட்டேன்?**

உங்கள் பல் மருத்துவர் அல்லது கண் மருத்துவர் புற்றுநோய் இருக்கும் சாத்தியத்தை தெளிவுபடுத்திக் கொள்வதற்காக உங்கள் அறிகுறிகளை மேலும் ஆய்வுசெய்ய வேண்டியிருக்கிறது என்று உணர்ந்த காரணத்தினால் நீங்கள் அவசரமாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளீர்கள். உங்களிடம் என்ன தவறுள்ளது என்பதைக் கண்டறிய நீங்கள் விரைவாகப் பார்க்கப்படுவதை எதிர்பார்க்கலாம்.

**எனக்கு புற்றுநோய் உள்ளது என்று இதற்கு அர்த்தமா?**

இந்த அறிகுறிகள் புற்றுநோய் உட்பட பல பொதுவான நோய்களோடு தொடர்புடையதாக இருக்கக்கூடும். எனினும், அவசரமாகப் பரிந்துரைக்கப்பட்ட பலருக்கு புற்றுநோய் இருப்பதில்லை. புற்றுநோய் கண்டறியப்படும் சூழலில், துவக்ககட்டத்திலேயே அது கண்டறியப்படுவது என்பது சிகிட்சையை மேலும் திறனுள்ளதாக ஆக்க வாய்ப்புள்ளது. இதனால்தான் நீங்கள் அவசரமாக பார்க்கப்படுவது முக்கியமாகிறது.

**இந்தப் பரிந்துரை அவசரமானது. உங்கள் மருத்துவமனையுடன் தொலைபேசி வாயிலாக அல்லது நேருக்குநேர் சந்திக்க அடுத்த 14 தினங்களுக்குள் நேரம் ஒதுக்கப்படும். நோய் கண்டறிதலை விரைவாகச் செய்வதற்கு அடுத்த நான்கு வாரங்களில் நடைபெறக்கூடிய கூடுதல் சோதனைகளுக்கு நீங்கள் இருக்க வேண்டி வரலாம். இந்த நேரத்தின்போது நீங்கள் இருப்பதை தயவுசெய்து உறுதி செய்யுங்கள்.**

**எனது பல் மருத்துவர் அல்லது கண் மருத்துவர் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன?**

- மருத்துவமனை உங்களை தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொள்ள வேண்டியிருக்கலாம் என்பதால் உங்களிடம் அது இருப்பின், கைபேசி எண் உட்பட சரியான முகவரியையும் தொலைபேசி எண்ணையும் உங்கள் பல் மருத்துவர் அல்லது கண் மருத்துவரிடம் இருப்பதை உறுதிசெய்யுங்கள்.
- அடுத்த நான்கு வாரங்களுக்குள் உங்களால் நேர ஒதுக்கீடுகளுக்கு வரமுடியவில்லை எனில், தயவுசெய்து உங்கள் பல் மருத்துவர் அல்லது கண் மருத்துவரிடம் தெரிவிக்கவும்.
- உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர், அணுகுவதற்கான தேவைகள் அல்லது பெண் ஆலோசகர் தேவையெனில், உங்கள் நேர ஒதுக்கீட்டுக்கு முன்னதாகவே மருத்துவமனைக்குத் தெரியப்படுத்துங்கள்.
- இரு வாரங்களில் மருத்துவமனையிலிருந்து நீங்கள் நேர ஒதுக்கீட்டைப் பெறவில்லை எனில், தயவுசெய்து உங்களைப் பரிந்துரைத்த பல் மருத்துவர் அல்லது கண் மருத்துவரைத் தொடர்புகொள்ளுங்கள். மாறாக, உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட மருத்துவமனை உங்களுக்குத் தெரியுமென்றால், நீங்கள் அவர்களது நோயாளி ஆலோசனை மற்றும் தொடர்புச் சேவைகள் (PALS) துறையை தொடர்புகொள்ளலாம்.

**அடுத்து என்ன நிகழும்?**

ஒரு நேர ஒதுக்கீட்டுக்கு ஏற்பாடு செய்ய மருத்துவமனை உங்களைத் தொடர்புகொள்ளும். மருத்துவமனையுடன் உங்களது ஆரம்பகட்ட நேர ஒதுக்கீடு ஒரு செவிலி வல்லுநருடன் தொலைபேசி அல்லது காணொளி அழைப்பு வாயிலாக இருக்கலாம். உங்கள் அறிகுறிகள் குறித்து செவிலி வல்லுநர் மேலும் கண்டறிவார். மாறாக, ஒரு துறை நிபுணருடனும் உங்களுக்கு நேருக்கு நேர் நேர ஒதுக்கீடு செய்யப்படலாம்.

**தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்:** *நீங்கள் அழைப்பை பதிவுசெய்ய நினைத்தாலோ அல்லது அழைப்பில் ஒரு நண்பரை அல்லது குடும்ப உறுப்பினரையும் சேர்க்க விரும்பினாலோ மருத்துவரிடம் நீங்கள் தெரியப்படுத்த வேண்டும்.*

மருத்துவமனை நீங்கள் நேரடியாக வருவதற்கான நேர ஒதுக்கீடுகள் அல்லது நீங்கள் மருத்துவமனைக்கு வரும்நாளில் எடுக்க வேண்டியிருக்கும் சோதனைகள் குறித்த அறிவுறுத்தல்களை உங்களுக்கு அனுப்பும். உங்கள் நேர ஒதுக்கீட்டுக்குத் தயாராவது குறித்த அவ்வப்போதைய ஆலோசனைகளுக்காக இந்த அறிவுறுத்தல்களை கவனமாகப் பாருங்கள்.

மருத்துவமனையுடன் உங்கள் தேதி உறுதிசெய்யப்பட்டதும், அத்தேதியில் நீங்கள் வருகை தருவது மிகவும் முக்கியம். உங்களால் நேர ஒதுக்கீட்டின்படி வரமுடியாதெனில் உடனடியாக உங்கள் உறுதிப்படுத்தும் கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணில் மருத்துவமனையை அழையுங்கள்.

**மருத்துவமனையில் என்ன நிகழும்?**
உங்களிடம் மருத்துவமனை நேர ஒதுக்கீடு இருக்கும்போது, நீங்கள் வழக்கமாக ஒரு துறை நிபுணரைப் பார்க்கவோ அல்லது நோயறிதல் சோதனையில் கலந்துகொள்ளவோ செய்வீர்கள். உங்கள் நேர ஒதுக்கீட்டின்போது ஏதேனும் பரிசோதனைகள் எடுக்க வேண்டியிருந்தால் உங்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும். எனவே முன்னதாக உங்களுக்குத் தரப்படும் ஏதேனும் அறிவுறுத்தல்கள்களைப் பின்பற்றுவதை தயவுசெய்து உறுதிசெய்யுங்கள். காத்திருப்பு நேரங்களையும் நீங்கள் எடுக்க வேண்டிய பரிசோதனைகளையும் பொறுத்து இந்த நேர ஒதுக்கீடுகள் ஒருசில மணி நேரம் எடுக்கலாம்.

இந்த பரிசோதனைகளின் முடிவுகள் குறித்து பரிந்துரைக்கப்பட்ட 28 நாட்களுக்குள் உங்களைத் தொடர்புகொள்வோம். ஆனால் அதே நாளில்கூட உங்கள் பரிசோதனை முடிவுகள் தெரிவிக்கப்படலாம். ஆதரவுக்காக அல்லது மருத்துவக்குழு உங்களிடம் தெரிவிப்பதைப் புரிந்துகொள்வது குறித்த கவலை இருந்தால் நீங்கள் ஒரு நணபரையோ அல்லது குடும்ப உறுப்பினரையோ உங்களுடன் அழைத்துவர விரும்பலாம். வருகையாளர்கள் குறித்த வழிகாட்டுதலுக்கு உங்கள் கடிதத்தைப் பார்க்கவும்.

**ஏதேனும் கேள்விகள்?**
மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்பட்டது குறித்து ஏதேனும் கவலைகள் அல்லது கேள்விகள் இருந்தால், தயவுசெய்து நேரடியாகப்

பேசுவதற்கு உங்கள் அறுவை சிகிச்சை - பொது மருத்துவரை அல்லது உங்களைப் பரிந்துரைத்த பல் மருத்துவர் அல்லது கண் மருத்துவரை அழையுங்கள்.

உங்கள் நேர ஒதுக்கீட்டுக்கு முன்பாக உங்கள் அறிகுறிகள் மோசமடைந்தால் அல்லது புற்றுநோய் விலக்கப்பட்ட பின்னும் தொடர்ந்தால், தயவுசெய்து உங்கள் பொது மருத்துவரைத் தொடர்புகொள்ளுங்கள்.

## கூடுதல் விபரங்களுக்கான பயனுள்ள இணைப்புகள்

https://www.cancerresearchuk.org/
https://www.macmillan.org.uk/cancer-information-and-support

**உங்கள் ஆய்வுகளுக்கும் முடிவுகளுக்குமான தோராயமான கால வரம்பு கீழே தரப்பட்டுள்ளது. உங்கள் அறிகுறிகள் சிக்கலானவையாகவோ அல்லது பல பரிசோதனைகள் எடுக்க வேண்டிய தேவை உங்களுக்கு இருந்தாலோ இவை கூடுதல் நாட்கள் எடுக்கலாம்.**

**பரிந்துரை தொடக்கம்**

**பரிசோதனைகள்**
உ.ம். இரத்தம், MRI ஸ்கேன்

பல் மருத்துவர் அல்லது கண் மருத்துவர் உங்கள் அறிகுறிகளுக்கான காரணத்தைத் தீர்மானிக்க உதவுவதற்காக உங்களைப் பரிந்துரைக்கும் முன்பாக ஒரு பரிசோதனை எடுக்கும்படி உங்களிடம் கேட்கலாம்.

**மருத்துவமனை அமர்த்தம். 14 நாட்கள்**

**பல்/கண் பரிசோதனை பரிந்துரை**
கூடுதல் ஆய்வுக்கு அல்லது சிறப்பு நிபுணருடன் நேர ஒதுக்கீட்டுக்கு ஒரு மருத்துவமனையை உங்கள் பல் மருத்துவர் அல்லது கண் மருத்துவர் பரிந்துரைப்பார்

**கூடுதல் ஆய்வ**
CT அல்லது MRT ஸ்கேன் போன்றவை கூடுதல் ஆய்வுகளாக இருக்கலாம்

உங்கள் அறிகுறிகளுக்கான காரணத்தைத் தீர்மானிப்பதில் துறை வல்லுநருக்கு உதவுவதற்காக கூடுதல் பரிசோதனைகளை நீங்கள் எடுக்க வேண்டியிருக்கலாம். இந்த நேர ஒதுக்கீட்டுக்கு தயவுசெய்து முன்னுரிமை அளியுங்கள்

**மருத்துவமனை நேர ஒதுக்கீடு**
உங்கள் அறிகுறிகளையும் முடிவுகளையும் ஒரு சிறப்பு நிபுணருடன் விவாதிப்பதற்காக உங்கள் நேர ஒதுக்கீடு இருக்கும். உங்களுடன் ஒரு குடும்ப உறுப்பினரை அல்லது நண்பரை நீங்கள் அழைத்து வரலாம்

மருத்துவமனை ஒரு சிறப்பு நிபுணருடன் அவசர நேர ஒதுக்கீட்டுக்கும் உங்கள் நேர ஒதுக்கீட்டுக்கான அறிவுறுத்தல்களுக்கும் ஏற்பாடு செய்யும். இந்த நேர ஒதுக்கீட்டுக்கு தயவுசெய்து முன்னுரிமை அளியுங்கள்

**நோயறிதல் அல்லது புற்றுநோய் விலக்கப்பட்டது 28 நாட்கள்**

**முடிவுகள்**
இந்த பரிசோதனைகளின் முடிவுகள் குறித்து பரிந்துரைக்கப்பட்ட 28 நாட்களுக்குள் உங்களைத் தொடர்புகொள்வதை மருத்துவமனைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால் அதே நாளில்கூட உங்கள் பரிசோதனை முடிவுகள் தெரிவிக்கப்படலாம்.

**புற்றுநோய் விலக்கப்பட்டது**
இப்போதும் பரிசோதிக்க வேண்டிய அறிகுறிகள் உங்களிடம் இருக்கலாம். அவை தொடர்ந்தால் அல்லது மேலும் தீவிரமடைந்தால் நீங்கள் உங்கள் பொது மருத்துவரைத் தொடர்புகொள்ள வேண்டும்

உங்கள் துறை வல்லுநர் புற்றுநோய் விலக்கப்பட்டதையும் அடுத்து என்ன எதிர்பார்க்க வேண்டும் என்பதையும் தெரியப்படுத்த உங்களுக்கு எழுதுவார்.

**சிகிட்சைகளிக்கும் முடிவு 31**

**முதல் சிகிச்சை 62**

**புற்றுநோய் கண்டறியப்பட்டது**
புற்றுநோய் கண்டறியப்பட்டதை உங்களுக்குத் தெரியப்படுத்தவும் சிகிச்சை குறித்து விவாதிக்கவும் உங்கள் துறை வல்லுனர் உங்களைத் தொடர்புகொள்வார்

உங்கள் புற்றுநோய் சிகிச்சைக் குழுவும் உங்கள் பொது மருத்துவரும் என்ன எதிர்பார்க்கலாம், சிகிட்சையைத் தொடங்கும்போது கூடுதல் ஆதரவை எங்கு பெறலாம் என்பது குறித்த உங்கள் கேள்விகளுக்கு பதிலளிப்பார்கள்